(**2024-25-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** **24 UTM 408**

**REG.NO:**

## என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி ) :: பொள்ளாச்சி

## பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

பி. ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

நான்காம் பருவம் நேரம் : 3 மணி

பகுதி – 3

### தமிழ் இலக்கிய வரலாறு - II

**பகுதி – அ** **(10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. பௌத்த சமயத்தால் நமக்குக் கிடைத்த காப்பியம் எது?

   அ. மணிமேகலை ஆ. சீவக சிந்தாமணி இ.வளையாபதி ஈ. சூளாமணி

2. யாப்பெருங்கலம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

   அ.பவணந்தியார் ஆ. தண்டி இ. அமிர்தசாகரர் ஈ.ஐயனாரிதனார்

3. சிறுகதையின் எடுப்பும் முடிப்பும் குதிரை பந்தயம் போல் விறுவிறுப்பும் ஈர்ப்பும் இனிமையும் பெற்றிருக்க வேண்டும் என்றவர் **யார்?**

   அ. செக்ஜிக்விக் ஆ. ஆலன்போ இ. ராஜாஜி ஈ. தாக்கரே

4. மொழிக்கு முன்னே தோன்றியது **எது?**

   அ.எழுத்து ஆ. சொல் இ. பொருள் ஈ. இசை

5. **சிறந்த இலக்கியங்களுக்கு வழங்கப்படும் விருது எது?**

   அ. **சாகித்திய அகாதெமி விருது** ஆ. **அர்ஜூனா விருது**

   இ. **பரம்வீர் சக்ரா விருது** ஈ. **துரோணாச்சார்யா விருது**

**கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.** (K2)

6. வள்ளலாரின் மாணவர்கள், அவர் பாடல்களை என்ன பெயரிட்டு அழைத்தனர்?
7. **அறுவகை இலக்கணம் என்ற நூலை எழுதியவர் யார்?**
8. சித்தர் பாடல்கள் தோன்றிய காலமாகக் கருதப்படுவது **எது?**
9. தாளிகை என்பது எதனைக் குறிக்கும்?
10. தமிழ் இலக்கிய வரலாறு நூல்களில் முதன்மை பெறுவது யாருடைய நூல்?

**பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்)**

கீழ்க்காணும் வினாக்களுக்கு இரு பக்க அளவில் விடை தருக. **(K3)**

11. அ. தமிழ் வளர்ச்சிக்கு மடங்களின் பங்களிப்பு குறித்து எழுதுக.

(அல்லது)

   ஆ. வரையறை தருக. 1.ஹைக்கூ 2. சென்ட்ரியூ

**(த.பி.பா.)**

*ETHICAL PAPER*

12. அ. தனிப் பாடல்களின் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

ஆ. தொல்காப்பியத்திற்குப் பின் வந்த எழுத்திலக்கண நூல்களைப் பட்டியலிடுக.

13. அ. சிறுகதை இலக்கியத்தின் சீரிய வளர்ச்சியினைக் கூறுக.

(அல்லது)

ஆ. உரைநடை இலக்கியத்தில் வீரமாமுனிவரின் பங்களிப்பு யாது?

14. அ. தாளிகைகளின் வளர்ச்சி நிலை பற்றிக் கூறுக

(அல்லது)

ஆ. தமிழில் சிறுவர் இலக்கியங்களை வளர்த்தவர்களைக் கூறுக.

15. அ. தமிழ் நூல்களின் பதிப்புகலை பற்றிக் கூறுக.

(அல்லது)

ஆ. தமிழும் பிற துறைகளும் பற்றி எழுதுக.

**பகுதி – இ ( 5 X 8 = 40 மதிப்பெண்கள் )**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) கட்டுரை வடிவில் விடையளிக்க.(K4/ K5)**

16. அ. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரி.

(அல்லது)

ஆ. சமயங்கள் தமிழுக்கு ஆற்றிய பங்களிப்புகள் குறித்து கட்டுரைக்க.

17. அ. காலந்தோறும் தமிழ் இலக்கண நூல்களின் வளர்ச்சி குறித்து விவரிக்க.

(அல்லது)

ஆ. பல்வேறு வகையான தனிப்பாடல் வகைமைகளை விளக்குக.

18. அ. சித்தர் பாடல்களின் சிறப்புகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ. தமிழ் நாவல் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி கட்டுரை வரைக.

19. அ. இசைத்தமிழின் வரலாற்றை விவரி.

(அல்லது)

ஆ. நாடகத் தமிழின் வளர்ச்சிப் போக்கை வரைக.

20. அ. இருபதாம் நூற்றாண்டு தமிழ் வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகளைப் பட்டியலிட்டு எழுதுக.

(அல்லது)

ஆ. இயக்கங்களின் தமிழ் பங்களிப்புகள் குறித்து கட்டுரைக்க.

*ETHICAL PAPER*

***********************